# நொறுங்கிச் சரிகிறது வெளிநாட்டு மோகம்

உலக அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார தேக்க நிலையின் காரணமாக வேலைக்கு வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் வேலை இழந்து நாடு திரும்புவது அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. குறிப்பாக அரபு நாடுகளுக்கு சென்ற தொழிலாளர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி ஊதியமும் சரியாக வழங்கப்படாமல் இரவோடு இரவாக மூட்டை கட்டி அனுப்பும் படலம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக துபாய்க்கு சென்ற மக்கள்தான் அதிகம் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள்.

அரபு நாடுகளின் பொருளாதாரம் என்பது அந்த மண்ணில் கிடைக்கும் கருப்புத் தங்கம் என்ற கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுவை வைத்துதான் அமைந்துள்ளது. இதில் சற்று வித்தியாசமான முறையில் அமெரிக்காவைப் போன்று வளர்ச்சி பெற வேண்டும் என்று சிந்தித்த துபாய் ஆட்சியாளர்கள் கட்டுமானத் தொழிலை ஊக்குவித்து அதிலேயே முழு கவனமும் செலுத்தினார்கள். வேறு எந்த அரபு நாடுகளும் இந்த அளவிற்கு Real Estate துறையில் கவனம் செலுத்தவில்லை. பாலைவன மண்ணில் வானுயர்ந்த டவர்களை எழுப்பி வெளிநாட்டு கோடீஸ்வரர்களுக்கு விற்கும் தொழிலாக புதிய புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டது. அதற்கான தொழிலாளர்கள் அதிகம் இந்தியாவிலிருந்து வேலைக்காக சென்றனர்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இந்திய துணை கண்டத்திற்கும் இடையில்தான் உலகிலேயே அதிகம் மக்கள் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

இந்தியாவிலிருந்து அரபு நாடுகளுக்கு வேலை தேடிச் சென்றோர் எண்ணிக்கை 2003இல் 4.66 இலட்சமாக இருந்தது. அதுவே 2007இல் 8.09 இலட்சமாக இருமடங்கு அதிகரித்தது. இன்றைய தேதி வரை (GCC) எனப்படும் வளைகுடா நாடுகளின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 6 அரபு நாடுகளிலும் 50 இலட்சம் இந்தியர்கள் வாழ்கின்றனர். இதில் 80 விழுக்காடு கேரளா ஆந்திரா மற்றும் தமிழகத்திலிருந்து சென்றவர்கள்.

இந்த 6 அரபு நாடுகளில் பணியாற்றி வரும் இந்தியர்கள் தங்கள் தாய் நாட்டிற்கு அனுப்புகின்ற பணத்தின் மூலம் இந்திய அரசு பெறுகின்ற அன்னியச் செலாவணிதான் இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பு. இந்தியாவின் மொத்த அன்னிய செலாவணியில் 40 விழுக்காடு இந்த பகுதியிலிருந்துதான் வருகிறது. அதாவது வருடத்திற்கு ஒன்றரை இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் இந்த பகுதியிலிருந்து இந்திய அரசுக்கு வந்து கொண்டிருக்கிறது. இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 3 சதவீதம் ஆகும். மிக முக்கியமாக கேரள மாநிலம் தான் மிகப்பெரிய வருவாய் ஈட்டி வருகிறது. வெளிநாடுகளில் வாழும் குடிமக்கள் மூலம் பெறுகின்ற அன்னிய செலாவணி வருவாயில் உலகிலேயே இந்தியாதான் முதலிடம் பெறுகிறது. அதில் கேரளாவின் பங்கு 19.4 சதவிகிதமாகும். கேரளா மாநிலத்திற்கு கிடைக்கும் இந்தத் தொகை என்பது இந்திய அரசு தனது மத்திய நிதி வருவாயிலிருந்து கேரளாவிற்கு ஒதுக்கும் தொகையைவிட 4 மடங்கு அதிகம். கேரள மாநிலத்தின் முக்கியமான வளர்ச்சிக்கு இந்த நிதிதான் பயன்பட்டு வந்துகொண்டிருக்கிறது.

UAEயில் ஏற்பட்டுள்ள இந்த பொருளாதார நெருக்கடியின் காரணமாக தினமும் 1500-2000 தொழிலாளர்கள் துபாய் மற்றும் சார்ஜாவில் இருந்து இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர். UAEயின் Economic Intelligence Unit என்ற பொருளாதார உளவுப் பிரிவின் ஆய்வறிக்கையில் துபாயின் மக்கள் தொகை எட்டு விழுக்காடு குறையும் என்று கூறப்பட்டுள்ளது.

UAEயின் மிகப்பெரிய நிறுவனமான மாஜித் அல் ஃபுத்தைம் (Magid Al-Futtaim) தனது நிறுவனத்தில் இது வரையிலும் 10% ஆட்குறைப்பு செய்துள்ளது. இந்நிறுவனத்தைத் தொடர்ந்து பல்வேறு ஐரோப்பிய நிறுவனங்களும் ஆட்குறைப்பு செய்து வருகின்றன. இது போன்ற பெரிய நிறுனங்களில் பணியாற்றி வந்தவர்கள் வெளிநாடுகளில் பணியாற்றுவது நிரந்தரமில்லாதது என்பதை உணராமல் பல்வேறு வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக வங்கிகளில் கடன் பெற்று வாகனங்கள் வாங்கியவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் வாகனங்களை துபாய் ஏர்போர்ட் மற்றும் பூங்காக்கள் போன்ற இடங்களில் உள்ள வாகனம் நிறுத்தும் இடங்களிலேயே நிறுத்திவிட்டு நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர். இதுவரையிலும் 3,000 கார்கள் இது போன்று கேட்பாரற்று கிடப்பதாக DNA செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது. மார்ச் மாதத்திற்குப் பிறகு இந்த நிலை இன்னும் மோசமாகும் என்று பல செய்திகள் தெரிவிக்கின்றன.

Dubai Ministry of Naturalization & Residency (DNRD) அறிக்கையின்படி சென்ற ஜனவரி மாதத்தில் மட்டும் 54,684 குடியுரிமை விசாக்கள் நீக்கப்பட்டுள்ளன. இது சென்ற வருடத்தைக் காட்டிலும் இருமடங்கு அதிகமானது.

மக்கள் அதிக அளவிற்கு துபாயில் இருந்து வெளியேறுவதைத் தடுத்திட அரசு நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளை அதிகரித்தும் குறுகிய காலப் பணிகளின் எண்ணிக்கையை அதிகரித்தும் நிலைமையை சரி செய்திட துபாய் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக பொது செலவுகளுக்கான நிதியை 42% அதிகரித்து 31.7 பில்லியன் திர்ஹம் வழங்கியுள்ளது.

இது போன்ற ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எந்த அளவிற்கு பயனைத் தரும் என்பது போகப் போகத்தான் தெரியும் என்று பொருளியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

எது எப்படியோ ஆட்டை, மாட்டை, வீட்டை, சோறு போடும் நிலத்தை மனைவியின் நகையை என்று அனைத்தையும் விற்று உல்லாச மாயையில் அரபு நாடுகள் சென்றால் நிரந்தரமாக அள்ளிக்கட்டலாம் என்ற கனவுகளுடன் வந்த படிப்பறிவு இல்லாத அப்பாவிகளுக்கு இந்த புள்ளி விவரங்கள் எதுவும் தெரிய வாய்ப்பு இல்லை. தெரிந்தாலும் இது அவர்களின் வாழ்வில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை.

இப்பொழுது ஏற்பட்டுள்ள இந்த பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதிகம் பாதிக்கப் பட்டுள்ள மாநிலம் கேரளாதான். தமிழகத்தை பொறுத்த வரை கூடுதலான தொழிலாளர்கள் வேலை யிழந்து தாயகம் திரும்பி வந்துள்ளனர். இவர்களில் பெரும்பான்மையானோர் யார் என்றால் நிரந்தரமாக வறுமையைப் போக்கும் ஆற்றல் படைத்த உயர்கல்வி குறித்து விழிப்புணர்வு இல்லாமல் பள்ளிப் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு சொகுசாக வாழலாம் என்று கண்மூடித்தனமாக ஓடிய மக்கள். இவர்கள் திரும்பி இங்கே வந்த பிறகு என்ன செய்வது என்று தெரியாமல் விழிபிதுங்கி நிற்கின்றனர். பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திய அறியாமையின் விளைவுகளை இப்போது அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். படித்து பட்டம் பெற்று சென்றவர்கள் திரும்பி வந்தால் அவர்கள் பெற்ற கல்வி அறிவின் காரணமாக நமது நாட்டிலேயே கண்ணியமான வேலைவாய்ப்புகளைப் பெறுகின்றனர்.

அரசனை நம்பி புருசனை கைவிட்ட கதையாகிவிட்டது என்பதை மக்கள் உணர வேண்டும். மிகக்குறிப்பாக முஸ்லிம் சமூகம் உணரவேண்டும். வெளிநாட்டு மோகத்தின் காரணமாக அங்கே கிடைக்கும் சொற்ப பணத்திற்காக தாங்கள் இழந்த வாழ்வை எண்ணிப் பார்க்க வேண்டும். இனி எந்த காரணத்திற்காகவும் எனது மனைவி, மக்கள், எனது சமூகத்தை விட்டுப் பிரிய மாட்டேன் என்று இளைய தலைமுறை முடிவு எடுக்க வேண்டும். அல்லது அதற்கான முழுமையான கல்வித் தகுதியைப் பெற்று குடும்பத்துடன் செல்வதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

**CMN சலீம்**

**1/5/2009**